**சுருக்கம்**

மதுரை மாவட்டம் - உசிலம்பட்டி வட்டம் - 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டம் - திருவாளர்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கண்ஸ்டிரக்சன்ஸ், மதுரை மற்றும் மதுரை மாவட்ட பெரியாறு வைகை வடிநில வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் இடையே நடைபெற்ற நடுவர் மன்ற வழக்கில் நடுவரின் அமர்வுகளுக்கான கட்டணம் ரூ.3,42,500/-க்கு நிதி ஒப்பளிப்பு அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.


---

**நீர்வளத் (எஸ்.2) துறை**

**அரசாணை (டி) எண்.249**

நாள்.26.09.2022
சுபகிருது, புரட்டாசி 9
திருவள்ளுவர் ஆண்டு 2053
மீண்டும் படிக்கப்பட்டவை :

1. அரசாணை (டி) எண்.284, பொதுப்பணித் (ப்பி1) துறை, நாள்.30.09.2019.
2. அரசாணை (டி) எண்.193, பொதுப்பணித் (எஸ்2) துறை, நாள்: 01.11.2021.

**மேலும் படிக்கப்பட்டவை**

3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை (கூ/பொ), சேப்பாக்கம், சென்னை கடித எண்.தவஅ / சிவஅ / கோ.32573 / 2019, நாள்.29.09.2021.

***

**ஆணை :**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் திட்டத்தின் துணைப் பணியான நெடுகை 23.245கி.மீ முதல் 24.645கி.மீ வரை தொட்டிப்பாலம் அமைக்கும் பணியின் செயலாக்கத்தில் திருவாளர்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கன்ஸ்டிரக்சன்ஸ், மதுரை மற்றும் மதுரை, பெரியாறு வைகை வடிநில வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினை (Dispute) தீர்வு செய்ய O.P.எண்.871/2018-ல் 23.01.2019 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, நடுவராக நியமனம் செய்யப்பட்ட ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.G.M. அக்பர் அலி அவர்களின் முதல் அமர்வில் தீர்மானித்தபடி நடுவர் கட்டண முன்பணம் ரூ.1,00,000/- எதிர்வாதியான நீர்வள ஆதாரத்துறை சார்பில் செலுத்துவதற்கு நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணையிடப்பட்டது.

2..மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. G.M. அக்பர் அலி அவர்களின் மூன்றாவது அமர்வில் தீர்மானித்தப்படி நடுவர் கட்டண முன்பணம் ரூ.2,00,000/-ஐ எதிர்வாதியான நீர்வள ஆதாரத்துறை சார்பில் செலுத்துவதற்கு நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்களின் கடிதத்தில், மேற்காணும் ஒப்பந்த நிறுவனம் மேற்படி நடுவர் மன்ற வழக்கு எண்.A.F.No.39/2019 வழக்கினில் மொத்த தொகையாக ரூ.6,86,42,341/- கோரியுள்ளது என்றும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை அவர்களால் ரூ.1,02,92,240/-- கோரப்பட்டுள்ளது என்றும் மொத்த கோருதல் தொகை ரூ.7,89,34,581/- ஆகும். மொத்த கோருதல் தொகை ரூ.7,89,34,581/- இல் Arbitration and Concillation act 1996 -ன் IVth Schedule-ன் படி நடுவர் கட்டணம் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

Arbitration and concillation act 1996-ன் IVth Schedule-ன் படி ரூ.10,00,00,000/-க்கு நடுவர் கட்டணம் ரூ.3,37,500 + 1 % (ரூ.1,00,00,000/-க்கும் கூடுதலான கோருதல் தொகை )

= ரூ.3,37,500 +1 % (ரூ.7,89,64,581/- - ரூ.1,00,00,000 = ரூ.6,89,34,581/-)

= ரூ.3,37,500 + 1 % (ரூ.6,89,34,581/-

= ரூ.3,37,500/- + ரூ.6,89,346/-

= ரூ.10,26,846 + ரூ.10,26,846 *25 % as sole Arbitration

= ரூ.10,26,846 + ரூ.2,56,711/- மொத்தம் = ரூ.12,83,557/-

4. மேலும், இந்நேர்வில் 06.02.2021 அன்று நடைபெற்ற நடுவர் அமர்வு கூட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு தரப்பும் ரூ12,83,557/- தொகையானது ரூ.12,85,000/-க்கு முழுமை செய்யப்பட்டு வழக்கின் இரு தரப்பினரும் சமமாக பிரித்த தொகை ரூ.6,42,500/-னை இரு தரப்பினரும் நான்கு வாரங்களுக்குள் செலுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்காணும் வழக்கு தொடர்பாக, நடுவருக்கு செலுத்த வேண்டிய மொத்த நடுவர் கட்டணம் ரூ.6,42,500/-இல் ஏற்கனவே நடுவருக்கு செலுத்திய முன்பணம் ரூ.3,00,000/- போக, நடுவர் கட்டணமாக ரூ.3,42,500/- (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) இவ்வழக்கில் எதிர்வாதியான நீர்வள ஆதாரத்துறை சார்பில் செலுத்துவதற்கு உரிய அரசாணையினை பெற்றுத்தருமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத் துறை அவர்கள் கோரியுள்ளார்.

5. மேற்கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பெறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர், அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, திருவாளர்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கண்ஸ்டிரக்சன்ஸ், மதுரை மற்றும் மதுரை பெரியாறு வைகை வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற நடுவர் மன்ற வழக்கு AF எண்.39/2019-ல் (அசல் மனு எண்.871/2018) பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி நியமனம் செய்யப்பட்ட நடுவரின் அமர்வு கூட்டத்தில் நிர்ணயம் செய்தபடி, நடுவர் கட்டணமான ரூ.12,85,000/-ல் இத்துறையால் வழங்கப்படவேண்டிய நடுவர் கட்டணம் ரூ.6,42,500/- ல் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டத் தொகை ரூ.3,00,000/- போக, மீதம் ரூ.3,42,500/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2700 – பெரிய பாசனத் திட்டங்கள் – 05 – வைகை வடிநிலம் – 101 – பராமரித்தலும் பழுதுபார்த்தலும் – மாநிலச் செலவினங்கள் – AA - வைகை வடிநிலம் – 333 – தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 01- அரசு வழக்கு நடத்துனர்கள் கட்டணங்கள்.
(IFHRMS த.தொகு : 2700 – 05 – 101– AA – 333 01)

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.3,42,500/-ஐ 2022 - 2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்யவிருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட முதன்மைத் தலைமைப் பொறியாளர், (மற்றும்) தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை நிதித் (பொ.ப.II) துறைக்குத் தவறாமல் அனுப்புமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.42073/PW-II/22, நாள்.20.09.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1276 (ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஆறு) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No. (2022091276)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தீப் சக்சேனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) நீர்வளத்துறை சென்னை-5.
தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை-2.
முதன்மை மாநில கணக்குத் தலைவர், (கணக்குகள் மற்றும பணிவரவுகள்), சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
உடனுறைத் தணிக்கை அலுவலர், (The Resident Audit Officer, O/o.Principal Accountant General(General and Social Sector Audit), தலைமைச் செயலகம், சென்னை-9.

**நகல்**

நிதி(வ.செ.பொ.II/பொ.ப. II / வ.வ.I), தலைமைச் செயலகம், சென்னை-9.
பொதுப்பணி(அ.ந.மு2) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

26/09/2022

**பிரிவு அலுவலர்**

26/9/2022